**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண்**
**அறிக்கை**
**(20.05.2023 முதல் 24.05.2023)**

**அறிக்கைஎண் 040/2023**

**தேதி.19..05.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 43°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 31°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 15°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 16.05.23 முதல் 18.05.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 36°செமுதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 82 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 49 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-13 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (16.05.2023 முதல் 18.05.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 24.05.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16/05 | 17/05 | 18/05 | தேதி | நாள்-1 20/05 | நாள்-2 21/05 | நாள்-3 22/05 | நாள்-4 23/05 | நாள்-5 24/05 |
| 0.0 | 0.9 | 4.5 | மழை (மி.மீ) | 4 | 3 | 5 | 3 | 3 |
| 36 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 38 | 37 | 37 | 36 |
| 25 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 25 | 25 | 24 |
| 4 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 6 | 4 | 4 |
| 79 | 75 | 82 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 49 | 60 | 49 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 55 | 55 | 55 | 55 | 55 |
| 13 | 12 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 12 | 10 | 10 | 10 |
| 200 | 70 | 180 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (20.05.2023 முதல் 24.05.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ முதல் 38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 20-05-2023 | 26.0 | 5.0 | 7.0 | 12.0 | 7.0 | 5.0 | 20.0 | 20.0 | 4.0 | 7.0 | 5.0 | 9.0 |
| 21-05-2023 | 6.0 | 1.0 | 2.0 | 3.0 | 2.0 | 1.0 | 5.0 | 5.0 | 1.0 | 2.0 | 1.0 | 2.0 |
| 22-05-2023 | 11.0 | 4.0 | 5.0 | 6.0 | 4.0 | 4.0 | 9.0 | 9.0 | 4.0 | 5.0 | 4.0 | 5.0 |
| 23-05-2023 | 15.0 | 3.0 | 4.0 | 7.0 | 4.0 | 3.0 | 11.0 | 11.0 | 2.0 | 4.0 | 2.0 | 5.0 |
| 24-05-2023 | 4.0 | 1.0 | 2.0 | 2.0 | 1.0 | 1.0 | 3.0 | 3.0 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசான தூறல் மழையுடன் காற்றின் வேகம் 6 -10 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>எதிர்பார்க்கப்படும் மழையினை சரிவுக்கு குறுக்காக கோடை உழவுசெய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் மண்அரிப்பினையும் தடுக்கலாம்.<br>தூறல் மழை மட்டுமே எதிர்பார்க்கப்படுவதால் உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பதனை மழையில்லா நேரங்களில் செய்து முடிக்கவும்.<br>மண்ணின் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாசனம் செய்வதன் மூலம் அதிக வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம். |
| நெல் | நாற்றாங்கால் | குறுவை நெல் நாற்றாங்கால் தயாரிப்பதற்கு இது உகந்த தருணம் ஆகும். எனவே போதுமான தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் நாற்றாங்கால் தயாரித்து விதைப்பு செய்யலாம். |
| எள் | அறுவடை | எதிர்பார்க்கப்படும் வானிலையை பயன்படுத்தி அறுவடை செய்துள்ள எள் பயிரினை காலை 10 மணி முதல் மாலை 4 மணிக்குள் உலர்த்தி எள்ளினை பிரித்து பதப்படுத்தவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான சூறைக்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| வாழை | 5 மாதத்திற்கு | மழையுடன் 10 கி.மீ மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி தகுந்த வடிகால் வசதியுடன் மஞ்சள் நடவு செய்யவும். தேவைப்பட்டால் மண்ணின் ஈரத்தை பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |
| திராட்சை | | தற்போதைய வானிலையை கருத்தில் கொண்டு திராட்சை பயிரில், தாம்சன் இரகத்திற்கு 2 கணு அளவிலும், ஏனைய இரகங்களுக்கு 4 கணு அளவிலும் கவாத்து செய்யவும். |
| கால்நடைகள் | | மழையுடன் இடி மின்னலும் எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை பாதுகாக்க கொட்டைகளுக்குள் கட்டவும்.<br>கடந்த வார மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை மேயவிடாமல் கால்நடைகளை பாதுகாக்கவும். |

## குறுஞ்செய்தி

- மழையுடன் 10 கி.மீ மேல் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்க தகுந்த முட்டு கொடுக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**